بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் தமது நிலைகளை சீர்தூக்கி பார்த்து இது போன்ற பலவீனமான நிலையை உணர்ந்தால் உடனே அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையில் சென்று அமர்ந்து விடுவார்கள். பின்னர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றலின் மூலமாக தமது நோய்க்குரிய சிகிச்சையை எடுத்துக் கொள்வார்கள். ஆனால் நாம் இந்த சிந்தனையில் இருந்தவாறே தனது இறைவணக்கம் மற்றும் துஆக்கள், பாவமன்னிப்பு கோருதல் போன்ற விஷயங்களை எப்போதும் கடைபிடிக்க வேண்டும். இந்த வழிமுறை மூலமாக தமக்கு எப்போதும் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்க வேண்டும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களைவலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 22.07.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

கடின உழைப்பு மற்றும் தனது உடல் ஆரோக்கியத்தை பேணுவதிலும், உடலை சுறுசுறுப்பாக வைத்திருப்பதிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்னென்ன வழிமுறைகளை மேற்கொண்டார்கள் என்பது தொடர்பாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அன்னார் ஒரு போதும் சோம்பேறித்தனத்தை கையாண்டதில்லை. மாறாக, மிகவும் கடின உழைப்பு செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். தனிமையை விரும்பக்கூடியவர்களாக அன்னார் இருந்த போதிலும் கடின உழைப்பை செய்வதிலிருந்து பின்தங்கியதில்லை. பல முறை அன்னாருடைய பயணத்தில் இவ்வாறே நிகழ்ந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு இடத்திற்கு பயணம் மேற்கொள்ளும் போது குதிரை வண்டியை வேலைக்காரனிடம் ஒப்படைத்து விட்டு அனுப்பி வைத்து விடுவார்கள். பின்னர் 20, 25 மைல் தூரம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நடை பயணம் மேற்கொள்வார்கள். பெரும்பாலும் அன்னார் நடைபயணமாகவே பயணம் மேற்கொள்வார்கள். மிகவும் குறைவாகவே வண்டியில் செல்வார்கள். இவ்வாறு நடந்தே செல்கின்ற பழக்கம் அன்னாரின் கடைசி காலகட்டம் வரை இருந்து வந்தது. 70 வயதை தாண்டிய நிலையில் பல கடுமையான நோய்கள் அன்னாருக்கு இருந்த போதிலும் தினமும் காற்று வாங்க செல்வார்கள். 4,5 ஐந்து மைல் தினமும் நடந்து செல்வார்கள். சில நேரத்தில் 7 மைல் தூரம் வரை நடந்து சென்றுள்ளார்கள்.

முதுமைக்கு முந்தைய நிலையை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே கூறி வந்துள்ளார்கள். சில நேரத்தில் சுபுஹ் தொழுகைக்கு முன்னரே எழுந்து நடைபயணம் செல்வார்கள். காதியானிலிருந்து ஏழரை மைல் தொலைவிலுள்ள வடாலா சென்றடைந்து விடுவார்கள். வடாலா காதியானிலிருந்து பட்டாலா செல்லும் வழியில் அமைந்துள்ள ஒரு கிராமமாகும். அப்போது அந்த நேரம் சுபுஹ் நேரத்தொழுகை நேரமாக இருக்கும்.

நமது முரப்பிமார்கள் மற்றும் முபல்லிக்மார்கள் ஏதாவதொரு வகையில் உடற்பயிற்சி செய்ய வேண்டும். அடுத்து இரண்டாவதாக இங்கு மேற்கத்திய நாடுகளில் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கக்கூடிய உணவு வகைகளும் மிக பொதுவான அதிக வழக்கத்தில் உள்ளன. ஏதாவது ஒன்றை சமைப்பதையும் தெரிந்திருக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நான் உங்களுக்கு மட்டும் இந்த அறிவுரையை செய்யவில்லை. அல்லாஹ்வின் அருளால் நானும் தொடர்ந்து உடற்பயிற்சி செய்கின்றேன். எவ்வாறிருப்பினும் நமக்கு உடல் ஆரோக்கியம் வாய்ந்த வாழ்க்கையை அர்ப்பணித்த மக்கள் மற்றும் முரப்பியீன்கள் தேவைப்படுகின்றது. எனவே அவர்கள் இந்த வகையில் தனது உடல் ஆரோக்கியத்தை பேணுகின்ற விஷயத்தில் கவனமற்றவர்களாகவும் சோம்பேறிகளாகவும் இருக்கக்கூடாது. அப்போது தான் அவர்களால் அழகிய முறையில் தனது பணியை செய்ய முடியும்.

சில நேரத்தில் சில மக்கள் எங்களது நன்மைகளின் நிலைகள் ஒன்று போல் இருப்பதில்லை என்று பெரும் கவலைகளை வெளிப்படுத்துகின்றனர். எங்களுக்கு மிகவும் கவலையாக இருக்கின்றது என்று கூறுகின்றனர். எனவே மனிதன் தன்னைத்தானே ஆய்வு செய்து கொண்டிருப்பது என்பது மிக நல்ல விஷயமாகும். எவ்வாறிருப்பினும் இது நல்ல விஷயம் தான். ஆனால் சில சந்தர்ப்பத்தில் இந்த விஷயம் தீமையாக இருப்பதில்லை. அதிகமான நன்மை மற்றும் குறைவான நன்மை என்ற இந்த இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட ஒரு நிலை மனிதனிடத்தில் அவ்வப்போது வந்து கொண்டே செல்லும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு நபித்தோழர் வந்தார். அவர் கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் இப்போது முனாஃபிக் ஆகிவிட்டேன். நான் உங்களோடு சபையில் அமர்கின்ற போது எனது நிலை

வேறொன்றாக இருக்கின்றது. ஆனால் உங்களுடைய சபையை விட்டு நான் எழுந்து சென்று விடும் போது எனது நிலை முற்றிலும் வேறொன்றாக இருக்கின்றது. உங்களுடன் அமர்ந்திருக்கின்ற போது என்னிடத்தில் இருக்கும் நன்மைக்கான உணர்வும் தூய்மையான உள்ளமும் உங்களை விட்டு எழுந்து வெளியே சென்ற பிறகு இருப்பதில்லை. அதற்கு, இது தான் ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாகும். நீங்கள் முனாஃபிக் அல்ல என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். சஹபாக்களின் சிந்தனை இவ்வாறாகவே இருந்தது. இந்த நிலை ஏற்படும் போது தான் மனிதன் தவ்பா, இஸ்திஃபார் மற்றும் துஆவின் மூலமாக தனது நிலையை சரி செய்து கொள்வதன் பக்கம் கவனம் செலுத்துகின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் தமது நிலைகளை சீர்தூக்கி பார்த்து இது போன்ற பலவீனமான நிலையை உணர்ந்தால் உடனே அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையில் சென்று அமர்ந்து விடுவார்கள். பின்னர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றலின் மூலமாக தமது நோய்க்குரிய சிகிச்சையை எடுத்துக் கொள்வார்கள். ஆனால் நாம் இந்த சிந்தனையில் இருந்தவாறே தனது இறைவணக்கம் மற்றும் துஆக்கள், பாவமன்னிப்பு கோருதல் போன்ற விஷயங்களை எப்போதும் கடைபிடிக்க வேண்டும். இந்த வழிமுறை மூலமாக தமக்கு எப்போதும் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்க வேண்டும். நம்மிடம் ஒரு அய்யம் ஏற்பட்டாலும் கூட கவனக்குறைவாக இருப்பதை விட அது சிறந்தாகும். ஏனென்றால் சில நேரங்களில் கவனக்குறைவு அல்லாஹ்வை விட்டு விலக்கி விடுகின்றது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக மார்க்கத்தை விட்டே விலகி விடலாம். பின்னர் அத்தகைய நபர் சிகிச்சையே இல்லாத ஆன்மீக நோயாளியாக ஆகி விடுவார். எனவே இந்த வகையில் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், மகிழ்ச்சி மற்றும் துக்கத்தின் தொடர்புகள் உணர்வுகளோடு இருக்கின்றது என்ற கட்டுரையை எடுத்துரைத்தார்கள். உதாரணமாக, ஒருவருடைய வீட்டில் ஒரு திருமணம் என்றால் அந்த நபர் திருமணத்தின் மகிழ்ச்சில் வீட்டிலுள்ளவர்களை பங்கு பெறச் செய்தவற்காக கடன் வாங்குவதற்கு கூட தயங்குவதில்லை. கடன் வாங்கி குடும்பத்தினரை மகிழ்ச்சியடையச் செய்கின்றார். அவர்களுடைய நெருங்கிய உறவினர்களும் அந்த மகிழ்ச்சியில் பங்கு பெறுகின்றனர். ஆனால் எவருக்கு அந்த நபருடன் தொடர்பு இல்லையோ அப்படிப்பட்ட நபருக்கு அந்த நபர் மகிழ்ச்சியாக இருப்பதும், அந்த குடும்பத்தினர் மகிழ்ச்சியாக இருப்பதும் எந்த மாறுபாட்டையும் ஏற்படுத்தாது. அந்த நபர் அதற்காக கடன் வாங்குவதும், தன்னை கஷ்டத்தில் ஆழ்த்திக் கொள்வதும் எந்த முக்கியத்துவத்தையும் பெறாது. ஒருவர் மகிழ்ச்சியாக இருக்கின்றாரா ? இல்லையா ? கடன் வாங்கி செலவு செய்கின்றாரா ? இல்லையா ? என்பதைப் பற்றியெல்லாம் தொடர்பு இல்லாத நபருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

அதே போன்று குடும்பத்தை நிர்வகிக்கின்ற ஒரு நபர் மரணித்து விட்டால் அந்த குடும்பத்தில் சோகம் சூழ்ந்து விடுகின்றது. ஆனால் அந்த நபரோடு எந்த நபருக்கு எந்த தொடர்பும் இருக்காதோ அவருடைய பார்வையில் அந்த நபரின் மரணம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் மரணிக்கின்றார்கள். தகவல்கள் கிடைக்கின்றன. ஆனால் எவர்களைப் பற்றி நாம் அறிந்திருப்பதில்லையோ அவருடைய மரண செய்தி நமக்கு வந்தடைந்த பின்னரும் அதைப் பற்றிய உணர்வு ஏற்படுவதில்லை. ஆனால் அதே நேரத்தில் தனக்கு நெருக்கமான ஒருவர் மரணித்து விட்டால் மிக அதிகமாக அதைப் பற்றிய உணர்வு ஏற்படுகின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது உணர்வுகளின் ஒரு விநோதமான தொடராகும். இதை சீர்தூக்கி பார்ப்பதனால் மனிதனிடத்தில் ஆச்சரியப்படத்தக்க ஒரு நிலை உருவாகின்றது. ஒரு விஷயம் ஒருவருக்கு மகிழ்ச்சிக்குரியதாகவும், நிம்மதிக்குரியதாகவும் இருக்கின்றது. ஆனால் அதே விஷயம் மற்றவருக்கு சோகத்தின் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

கூறுகின்றார்கள். இந்த கட்டுரையை எனக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு வரியில் எனக்கு கற்றுக் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தினமும் பத்திரிகையை படித்து வந்தார்கள். எவர்களிடத்தில் மார்க்க தொண்டுகள் தொடர்பான பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்களுக்கு இதில் ஒரு படிப்பினை உள்ளது. அவர்கள் தினமும் பத்திரிகை படிக்க வேண்டும். சின்னச்சின்ன விஷயங்களைக்கூட பார்க்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தினமும் பத்திரிகை படித்து வந்தார்கள். 1907 ஆம் ஆண்டு ஒரு நாள் நடந்த சம்பவமாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கும் போது என்னை அழைத்தார்கள். மஹ்மூது எனக்கூறி என்னை அழைத்தார்கள். நான் சென்று ஆஜரானேன். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஒரு நபரின் பெயரைக் கூறி அந்த நபரின் பெயர் எனக்கு தற்போது நியாபகமில்லை. அவர் மரணித்து விட்டதாக என்னிடம் கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்டு எனக்கு சிரிப்பு வந்து விட்டது. எனவே அவர் மரணித்தால் எனக்கு என்ன ? என்று நான் கேட்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட

மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். இறந்த மனிதருடைய வீட்டில் சோகம் சூழ்ந்திருக்கும். ஆனால் நீங்களோ எனக்கு என்ன வந்து விட்டது ? என்று கூறுகின்றீர்கள். இதற்கு என்ன காரணம் ? என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். காரணம் என்னவென்றால், எவருடன் நமக்கு எந்த தொடர்பும் இருக்காதோ அவருடைய வேதனையின் தாக்கம் நமக்கு ஏற்படாது. அதே போன்று மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்றாலும் அந்த மகிழ்ச்சியின் தாக்கமும் ஏற்படாது.

தமது அன்பிற்குரியவர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்காக குறிப்பாக துஆ செய்ய வேண்டும். மகிழ்ச்சி மற்றும் துக்கத்தின் தருணங்களில் நாம் அவர்களை உணர வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பொதுவாக ஜமாஅத் உறுப்பினர்களுக்காகவும் நமது மகிழ்ச்சி மற்றும் துக்கத்தின் உணர்வுகள் வெளிப்பட வேண்டும். ஏனென்றால் ஜமாஅத் என்ற அளவில் ஒட்டுமொத்த ஜமாஅத்தும் ஒரு வகையில் ஒரு உடலாக இருக்கின்றது. ஒவ்வொரு ஜமாஅத் உறுப்பினரின் மகிழ்ச்சியையும் வேதனையையும் உணரும் போது தான் அந்த உணர்வு வெளிப்படுவது சாத்தியமாகும். இந்த விஷயம் ஜமாஅத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு ஒரு வழிமுறையாக இருக்கின்றது.

அடுத்து சில மக்கள் ஆட்சேபனை செய்து விடுகின்றனர். உதாரணமாக, ஒருவருக்கு ஜமாஅத் அமைப்பு சார்பாக தண்டனை வழங்கப்படுகின்றது. அவ்வாறு ஒருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது எனக்கு எதிரான இந்த நடவடிக்கை தவறானதாகும் என்று கூறுகிறார். ஆனால் இன்ன நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் பாதுகாக்கப்பட்டிருக்கின்றார் என்றும் கூறுகின்றனர். இது போன்ற ஆட்சேபணைகள் ஒன்றும் புதிதானதல்ல. ஒவ்வொரு காலத்திலும் இது போன்ற ஆட்சேபணைகள் செய்யப்பட்டுள்ளன. இன்றும் செய்யப்படுகின்றது. இதற்கு முன்பும் செய்யப்பட்டுள்ளது. அது போன்ற மக்களை நினைவு கூர்ந்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஜமாஅத் அமைப்பை சீர்செய்வதற்காக சிந்தனைகள் ஒன்றுபடுவதற்கு ஒரு எல்லை இருக்கின்றது. சில சமயம் கருத்து வேறுபாடு வெளிப்படையில் பெரியதாக தென்படலாம். ஆனால் அது எந்தவொரு குழப்பத்திற்கும் காரணமாக இல்லாமல் இருந்தால் அத்தகைய நபர் ஜமாஅத்தில் இணைவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் இன்னொரு நபர் அதை விட குறைவான கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் அவருடைய அந்த கருத்து வேறுபாடு ஏதாவதொரு ஜமாஅத்தில் பிணக்குகள் ஏற்பட காரணமாக இருந்தால் அவர் ஜமாஅத்திலிருந்து வெளியேற்றப்படுகின்றார்.

ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடத்தில் ஒரு நபர் கேட்டார். நான் இப்போது ஷியாக்களிலிருந்து வெளியேறி உள்ளேன். அதாவது அவர் ஷியாவாக இருந்தார். நான் ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களை விடவும், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை உயர்ந்தவர்களாக கருதுகின்றேன். ஏனென்றால் என்னிடத்தில் ஷியாக்களின் தாக்கம் அதிகமாக உள்ளது. இந்த கொள்கையை நான் கொண்டிருந்த பின்னரும் நான் உங்கள் கையில் பைஅத் செய்ய இயலுமா ? என்று கேட்டார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஆம். நீங்கள் பைஅத் செய்யலாம் என்று அந்த நபருக்கு பதிலளித்தார்கள். இதற்கு நேர் எதிரில் ஒரு சந்தர்ப்பதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சில நபர்களை காதியானிலிருந்து வெளியே சென்று விடுமாறு கூறினார்கள். அவர்களுக்கு தண்டனை வழங்கும் விதமாக அவ்வாறு செய்தார்கள். அவர்கள் தொடர்பாக பிரசுரங்களையும் வெளியிட்டார்கள். காரணம் என்னவாக இருந்ததென்றால், அவர்கள் ஐவேளை தொழுகையை தொடர்ந்து நிறைவேற்றாதவர்களாக இருந்தார்கள். மேலும் அவர்களின் சபைகளில் புகை பிடிக்கின்ற பழக்கமும் நடந்து வந்தன. ஆனால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வளவு பெரிய கருத்து வேறுபாடு கொண்டிருந்த நபருக்கு பைஅத் செய்வதற்கு அனுமதி வழங்கி விட்டார்கள். அதே நேரத்தில் புகை பிடித்த மற்றும் கேலி கிண்டல்களில் ஈடுபட்ட நபர்களை தலைமையத்திலிருந்து வெளியேறும்படி கட்டளை இடுகின்றார்கள்.

பாருங்கள் ! மதுவைப் போன்று புகை பிடித்தல் தடுக்கப்பட்ட விஷயம் இல்லையென்றால் அதனை பயன்படுத்தியதற்காக சிலரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஜமாஅத்தை விட்டே வெளியேற்றி விடுகின்றார்கள். அதே நேரத்தில் நான் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களை விட மிக உயர்வானவராக கருதுகின்றேன் என்று எந்த நபர் கூறினாரோ அவருக்கு எதிரான கொள்கையை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கொண்டிருந்த போதிலும் அவருக்கு பைஅத் செய்வதற்கு அனுமதி வழங்கினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: சில விஷயங்கள் சூழ்நிலையின் குழப்பத்தின் காரணமாக பெரியதாக இருக்கும். ஆனால் உண்மையில் அது சிறியதாகவே இருக்கும். ஆனால் சில விஷயங்கள் சூழ்நிலையின் குழப்பத்தின் அடிப்படையில் சிறியதாக இருக்கும். உண்மையில் அது மிகப்பெரியதாக இருக்கும்.

எனவே அந்த தருணத்தின் குழப்பத்தை கருத்தில் கொண்டு சில விஷயங்கள் புறந்தள்ளப்படுகின்றன. சிறிய விஷயத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனவே இந்த ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் ஒருபோதும் அறிவுடன் செயல்பட்டதில்லை. அவர்களின் நோக்கம் ஆட்சேபனை செய்வதாகவே இருக்கின்றது. அத்தகைய நபர்களுக்கு சில ஆதரவாளர்களும் கிடைத்து விடுகின்றனர். எவர்களுக்கு தண்டனை கிடைக்கின்றதோ அவர்களுக்கு உண்மையில் விஷயம் என்ன ? என்றும் எதன் காரணமாக தண்டனை கிடைக்கின்றது என்றும் அவர்களுக்கு தெரியாமல் இருக்கின்றது. எனவே தேவையில்லாமல் இது போன்ற விஷயங்களில் தேவையின்றி தலையிடவும் கூடாது. பரிந்துரையும் செய்யக்கூடாது. ஆனால் ஆயினும் ஜமாஅத் அமைப்பு விரும்பினால் ஆய்வு செய்து அவருக்கு மன்னிப்பும் வழங்கி விடும். இதுபோன்ற ஆட்சேபனையாளர்கள் இன்றும் இருக்கின்றனர். தவறான வேலை செய்கின்றனர். தண்டனை கிடைக்கும் போது தன்னை சீர்படுத்திக் கொள்வதற்கு பகரமாக ஜமாஅத்திற்கு எதிராக பேசுகின்றனர். நாங்கள் எப்படி இருக்கின்றோமோ அப்படியே இருப்போம். நாங்கள் அவ்வாறு இருந்த போதிலும் ஜமாஅத் அமைப்பு எங்களை தனது அங்மாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றனர். நாங்கள் எங்களது நிலையை ஒருபோதும் சீர்செய்து கொள்ள மாட்டோம் என்றும் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் குழந்தைகளின் தர்பிய்யத்திற்காக ஒரு கட்டுரை ஒன்றை எழுதினார்கள். அதில் ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய கதை ஒன்று கூறுகின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 1898 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி அஸர் தொழுகைக்குப் பிறகு எனது விண்ணப்பத்திற்கேற்ப இந்த கதையை எனக்கு கூறினார்கள். அதிலிருந்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கையும் உறுதியும் கொள்வதனாலும் அல்லாஹ்வின் மீது அச்சம் கொள்வதனாலும் அல்லாஹ்வே மனிதனுக்கு போதுமானவனாக ஆகிவிடுகின்றான். யாரும் அறிந்திராத வகையில் அந்த நபரின் தேவையை பூர்த்தி செய்து விடுகின்றான்.

ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். ஒரு முறை ஒரு பெரியவர் எங்கோ ஒரு பயணத்தில் சென்று கொண்டிருந்தார். அவருக்கு ஒரு காட்டை கடக்க நேர்ந்தது. அங்கு ஒரு திருடன் இருந்தான். அந்த திருடன் அந்த வழியாக சென்று வருபவர்களிடம் வழிப்பறியில் ஈடுபட்டு வந்தான். அதுபோன்று அந்த பெரியவரிடமும் வழிப்பறியில் ஈடுபட்டான். அந்த பெரியவர் அவனிடம் கூறினார். வஃபிஸ் ஸமாயி ரிஸ்குகும் வமா தூஅதூன் அதாவது விண்ணில் உமக்கான உணவு இருக்கின்றது. அதற்கான வாக்குறுதி தரப்பட்டுள்ளது என்ற வசனத்தை ஓதினார்கள். அதற்கான நிபந்தனை இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். மேலும் அந்த பெரியவர் கூறினார். உனக்கான உணவு விண்ணில் உள்ளது. எனவே நீ அந்த இறைவனின் மீது நம்பிக்கை கொண்டு இறையச்சத்தை மேற்கொள். திருட்டை விட்டுவிடு. அந்நிலையில் இறைவன் தாமே உமது தேவைகளை பூர்த்தி செய்து விடுவான். பெரியவரின் இந்த கூற்று திருடனின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே அந்த திருடன் அந்த பெரியவரை விட்டு விட்டான். மேலும் அவரின் கூற்றின்படி அமல் செய்தான். கதையில் எவ்வாறு வருகிறதென்றால் அதன் விளைவாக அந்த திருடனுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களில் மிக உயர்தரமான உணவு கிடைக்கத் தொடங்கியது. அவனோ திருடி வந்தான். திருட்டை விட்டு விட்டு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து செயல்பட்டான். அதன் விளைவாக அவனுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரத்தில் உணவு கிடைத்தது. அந்த பாத்திரத்தில் அவர் உணவை உண்ட பிறகு அந்த பாத்திரங்களை தமது வீட்டை விட்டு வெளியே வீசி வந்தார். தற்செயலாக அந்த பெரியவர் அந்த வழியை கடந்து சென்றார். அப்போது அந்த திருடன் இறையச்சமுடையவராக இருந்தான். அவன் அந்த பெரியாரிடம் தனது நிலையை எடுத்துரைத்தான். எனக்கு வேறு சில வசனங்களை கூறுங்கள் என்று அவன் அந்த பெரியவரிடம் கேட்டான்.

அப்போது அந்த சான்றோர் கூறினார். ஃபவ ரப்பிஸ் ஸமாயி வல் அர்ழி இன்னஹு லஹக் அதாவது வானம் மற்றும் பூமியின் இறைவன் மீது ஆணையாக ! நிச்சயமாக இது உண்மையானதாகும். இந்த தூய சொற்களை அவன் செவியுற்றான். அதன் மூலம் இறைவனின் மகத்துவத்தை சிந்தனை செய்து மிகவும் துடிப்பிற்குள்ளானான். மேலும் அந்த நிலையிலேயே அவன் மரணித்துப் போனான்.

இது 8, 10 வயது கொண்ட குழந்தைக்கு ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய கதையாகும். இந்த கதையில் தக்வாவை மேற்கொள்வதனால் மனிதனுக்கு என்ன நன்மைகள் கிடைக்கின்ற என்பதையும் ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விவரிக்கின்றார்கள். வானம் மற்றும் பூமியில் இருப்பவர்களை இறைவனே பராமரிக்கின்றான். அவன் இருப்பதில் ஏதேனும் ஐயம் இருக்க முடியுமா ? அந்த இறைவன் தூய்மையானவன் மற்றும் உண்மையாளன் ஆவான். அவனே நம் அனைவரையும் பராமரிக்கின்றான். எனவே அந்த இறைவனுக்கு அஞ்சுங்கள். அவன் மீது நம்பிக்கை வையுங்கள். நற்பாக்கியத்தை மேற்கொள்ளுங்கள்.

இது ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் குழந்தைகளின் நிலை இவ்வாறிருந்தது. இது அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்ட பாடமாகும். ஆனால் இது இன்றைய காலத்திலுள்ள

பெரியவர்கள் புரிந்து கொள்வது கூட கடினமாகும். எனவே நம்மில் ஒவ்வொருவரும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எப்போதும் நான் இறையச்சத்தின் படி நடக்க முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வின் இருப்பின் மீது முழுமையான நம்பிக்கையும், உறுதியும் இருக்க வேண்டும். அவனே நம்மை வளர்த்து பராமரிக்கின்றான். அதில் எந்த ஐயமும் இல்லை. அவனே உண்மையான மற்றும் தூய்மையான இறைவன் ஆவான். அவனிடமே நாம் அஞ்ச வேண்டும். அவனிடத்திலேயே நாம் எப்போதும் வேண்ட வேண்டும். அவன் முன்னால் நாம் எப்போதும் குனிந்திருக்க வேண்டும். அவன் மீதே நாம் எப்போதும் நம்பிக்கை வைக்க வேண்டும். ஒரு முஸ்லிம் மேற்கொள்ள வேண்டிய நன்மை இதுவேயாகும். அதன் மீது நம்பிக்கை கொள்வதும் அதன்படி அமல் செய்வதும் அவசியமாகும்.

எனவே இந்த கதையில் குழந்தைகளை விட பெரியவர்களுக்கு பல படிப்பினை இருக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் நாம் இந்த விஷயத்தை மறந்து விடுகின்றோம். சில நேரத்தில் சில மக்கள் இறையச்சத்திலிருந்து விலகி நிற்கின்றார்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதற்கு பகரமாக மனிதர்கள் மீது அதிக நம்பிக்கை வைத்து விடுகின்றனர். அத்தகைய நபர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் மீதே அதிக நம்பிக்கை வைக்க வேண்டும். எனவே நம் அனைவரிடத்திலும் இந்த இறையச்சத்தை இறைவன் உருவாக்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Masjid Baitul Futuh, London – on 22.07.2016
Tamil Translation : Moulavi. Abdur Rahman Tahir Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516